# 3.2 பிறரை ஏற்றுக்கொள்ளுதல்

**வேத வசனம்:** பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம். ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். 1 யோவான் 4:7

**அறிக்கை:** தேவனின் அன்பு நான் வெறுக்கிறவர்களையும் நேசிக்க எனக்கு உதவுகிறது.

**சத்தியம்:** முதலாவதாக தேவன் நம்மில் அன்பு கூர்ந்ததால் நாம் அவரை நேசிக்கிறோம்.

## பாடக்குறிப்புகள்

* **அன்புத் தாழ்ச்சியான உலகம்.** - ரோமர் 3:23
* **சுய தேடுதலே மனித சுவாசம்** - 2 தீமோ 3:2
* **என்னைப்போலப் பிறரையும் நேசிக்க** - யோவான் 13:35
* **அன்பு தேவனிடத்திலிருந்து வருகிறது.** - 1 யோவான் 4:7-21

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *எப்பேர்ப்பட்ட மக்களுடன் பழகுவது உனக்குக் கடினமாகத் தோன்றுகிறது?*
- *நேசிக்க முடியாத அம்மக்களை நேசிப்பதைக் குறித்து வேதம் நமக்கு என்ன கூறுகிறது? (1யோவான் 4:7,8)*
- *தேவனுடைய நிபந்தனையற்ற அன்பை நாம் எப்படி வெளிப்படுத்த முடியும்? (1 யோ 4:20)*

## வேதப்பகுதி

*யோவான் 4:7-21, 8:1-11*

## இருதயங்களைச் சீர்ப்படுத்த தேவனால் முடியும்

ஒரு பெண் கடுமையானக் குளிரில் தன்னுடைய குழந்தையைக் காப்பாற்றப் போராடிக்கொண்டி ருந்தாள். தன்னுடைய தடிமனானத் துணிகளைக் கழற்றி குழந்தையின் மீது போர்த்தினாள். இதனால் அதிக குளிரில் உறைந்து அவள் மரித்துப்போனாள். குழந்தையோ உயிர் பிழைத்தது. அந்தத் தாயின் அன்பின் மூலம் இயேசு செலுத்திய விலைக்கிரயத்தை நாம் புரிந்துகொள்ளலாம். தம்முடைய குமாரன் சிலுவையில் மரித்துக்கொண்டிருந்தபோது தேவனுடைய இருதயம் எவ்வளவாய் நொறுங்கிப்போயிருக்கும். அதே சமயம் அவர் நம்மை எவ்வளவாய் நேசித்தார் என்பதையும் நாம் உணர வேண்டும். அதே அன்பை நாமும் பிறரிடம் காட்ட வேண்டும்.

### செயல்

நாம் பிறரிடம் அன்பு காட்டாவிட்டால் நாம் உண்மையாகத் தேவனை நேசிக்க முடியாது. யாரிடமாவது உடைபட்ட உறவு காணப்படுகிறதா? அதனை சீர்படுத்த இன்றே முயற்சி செய்.

### சிந்திக்க:

*குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டும் அல்லாமல் இயேசு கிறிஸ்து எவ்வாறு எல்லோரிடமும் அன்பை வெளிப்படுத்தினார்?*

______________________________

______________________________

### ஜெபம்:

*எல்லோரையும் நேசிக்கும் இதயத்தைத் தரவேண்டி ஒரு ஜெபத்தை எழுது.*

______________________________

______________________________